**தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**(ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் ஒரு துணை நிறுவனம்)**

**தலைமை அலுவலகம் - 87. எம்.ஜி. ரோடு, ஃபோர்ட், மும்பை 400 001**

---

**கடைக்காரர்களுக்கான காப்பீடு**

இதற்கான அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்படும் நபர், **நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** - க்கு (இதன் பிறகு நிறுவனம் என்று குறிப்பிடப்படும்) ஒரு எழுத்துப்பூர்வமான முன்மொழிவை (இதில் அடங்கியுள்ள அறிக்கைகளின் உண்மையை உறுதிப்படுத்தி) செய்திருக்கிறார் அல்லது செய்வதற்கு காரணமாக இருந்திருக்கிறார் என்ற நிலையில் இந்த முன்மொழிவே இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமைந்திருக்கிறது மற்றும் இதில் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலஅளவின்போது நடைபெறக்கூடிய, இதன்பிறகு குறிப்பிடப்பட்டுள்ள இடர் வாய்ப்புகளின் காப்பீட்டிற்காக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பிரிமியத் தொகையை செலுத்தியிருக்கிறார்.

இதில் அடங்கியுள்ள அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அல்லது வேறு விதிமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள விதிவிலக்குகள், பொருள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகிய வரையறைகளுக்கு உட்பட்டு, நிறுவனமானது கீழே குறிப்பிட்டபடி காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு இழப்பு அல்லது சேதம் அல்லது கடப்பாடு பொறுப்பு ஏற்படுமானால் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அவரோடு பணியாற்றும் இயக்குனர்கள் அல்லது நிர்வாகப் பணியாளர்கள் அல்லது அவரிடம் நிரந்தரமாக பணியாற்றுகின்ற பணியாளர்கள், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு பாலிசியின் காலஅளவில் அல்லது பாலிசி புதுப்பித்தலுக்காக அதைத் தொடர்ந்து வரும் காலத்திற்கு காப்பீடு செய்யப்பட்ட நபர், அதற்குத் தேவைப்படும் பிரிமியத் தொகையை செலுத்திய அல்லது செலுத்த ஒப்புக்கொண்டுள்ளபோது மற்றும் நிறுவனமானது அதை ஏற்றுக்கொண்டபோது அல்லது ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளபோது, காப்பீடு செய்த நபருக்கு அத்தகைய இழப்பு நேர்வின்போது, இழக்கப்பட்ட சொத்தின் மதிப்பை அல்லது அத்தகைய சேதத்திற்கான தொகையை அல்லது ஏற்பட்ட கடப்பாடு பொறுப்பின் தொகையை அல்லது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஆதாயங்களை வழங்கும். ஆனால், ஒரு பாலிசியின் காலஅளவின்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் அதற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகைக்கும் அதிகமாக இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாது.

**பொது நிபந்தனைகள்**

1. **அறிவிக்கை: அறிவிக்கை:** இப்பாலிசியின் கீழ், நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்ற ஒவ்வொரு அறிவிக்கை மற்றும் தகவலானது, இந்த காப்பீடு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் அலுவலகத்திற்கு எழுத்துப்பூர்வமாக இருக்கவேண்டும்.

2. **தவறான தகவல் / விவரணை:** தவறானத் தகவல், தவறான விவரணை அல்லது அறிந்த எந்தவொரு உண்மையையும் வெளிப்படுத்தாத நிலை ஆகிய நேர்வின்போது இந்த பாலிசியானது, செல்லாததாக ஆகிவிடும் மற்றும் செலுத்தப்பட்ட அனைத்து பிரிமியத் தொகையும் திரும்பப்பெற இயலாதவாறு நிறுவனத்தால் எடுத்துக்கொள்ளப்படும்.

3. **நியாயமான அக்கறை:** எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக காப்பீடு செய்யப்பட்டுள்ள சொத்தினை பாதுகாப்பதற்கு அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் காப்பீடு செய்த நபர் எடுக்கவேண்டும். தகுதிபெற்ற நபர்கள் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்த போதுமான அக்கறையை காப்பீடு செய்யப்பட்ட நபர் எடுக்கவேண்டும் மற்றும் அனைத்து விபத்துகளை தடுப்பதற்கான அனைத்து நியாயமான முன்னெச்சரிக்கைகளை

எடுப்பதோடு, அனைத்து சட்டப்பூர்வ விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றி நடக்கவேண்டும்.

4. **ரத்து செய்தல்:** 7 நாட்கள் நோட்டிஸ் கொடுப்பதன் மூலம் நிறுவனமானது, இந்த பாலிசியை எந்த நேரத்திலும் ரத்து செய்யலாம் அத்தகைய ஒரு நேர்வில், காலாவதியாகாத காப்பீடு கால அளவிற்கு ஏற்றாற்போல் பிரிமியத் தொகையின் விகிதாச்சாரப் பங்கை நிறுவனமானது, காப்பீடு செய்த நபருக்கு திரும்பக் கொடுக்கும். காப்பீடு செய்த நபரும் கோரிக்கை வைப்பதன் மூலம் இப்பாலிசி ரத்து செய்யப்படலாம். அத்தகைய நேர்வில், தீ விபத்திற்கான பிரிமிய விகிதப்படி, நிறுவனத்தின் குறைந்தகால அளவீடுகளில் இப்பாலிசி அமலாக்கத்திலிருந்த காலத்திற்கான பிரிமியத் தொகையை நிறுவனமானது தன்வசம் வைத்துக்கொள்ளும்.

5. **உரிமக் கோரிக்கைக்கான நடைமுறை: (i)** இந்த பாலிசியின் கீழ், உரிமக் கோரிக்கை எழுப்புவதற்கான அல்லது உருவாக வாய்ப்புள்ள எந்தவொரு நிகழ்வு, நிகழும்போது கீழ்கண்டவற்றை காப்பீடு செய்த நபர் செய்யவேண்டும்.

   a) திருட்டு நிகழ்கின்ற நேர்வின்போது, உடனடியாக காவல்துறையிடம் புகாரளிக்கவேண்டும் மற்றும் குற்றம் செய்த நபர் அல்லது நபர்களை பிடிப்பதற்கும் மற்றும் இழந்த சொத்தினை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு அவசியமான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

   b) காப்பீடு செய்தநபர் இதுகுறித்து அருகாமையில் உள்ள நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அறிவிக்கையை உடனடியாக வழங்கவேண்டும் மற்றும் இது நிகழ்ந்த 14 நாட்களுக்குள் தனது சொந்த செலவில், இழப்பு அல்லது சேத தொகைக்கான விவரங்களோடு நிறுவனத்திற்கு நியாயமாக தேவைப்படக்கூடிய அனைத்து விளக்கங்கள் மற்றும் சாட்சியங்களை உரிமக்கோரிக்கைக்கு ஆதாரமாக வழங்கவேண்டும்.

(ii) காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது எந்தவொரு பங்குதாரர், இயக்குனர் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் நிர்வாகப் பணியாளர்களின் உறுப்பினர் அல்லது பணியாளருக்கு உடல் ரீதியான காயம் ஏற்பட்டு, அதற்காக இப்பாலிசியின் கீழ் ஒரு உரிமக்கோரிக்கை வைக்கப்பட்டால் அல்லது வைக்கப்படக்கூடும் என்றால், முடிந்தவரை உடனடியாக எழுத்துப்பூர்வ அறிவிக்கை நிறுவனத்திற்கு தரப்படவேண்டும். ஆனால், காயம் அடைந்த நாளிலிருந்து 14 நாட்களுக்குள் இது கட்டாயமாக செய்யப்படவேண்டும். காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது எந்தவொரு பங்குதாரர், இயக்குனர் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் நிர்வாகப் பணியாளர்களின் உறுப்பினர் அல்லது பணியாளர் இறக்க நேருமானால், இறந்ததற்கான அறிவிக்கையானது, அந்நபரது சட்டப்பூர்வ பிரதிநிதிகளால் தரப்படவேண்டும். மருத்துவ பணியாளர்களால் வழங்கப்படுகின்ற அனைத்து சான்றிதழ்கள், தகவல்கள் மற்றும் சாட்சியம், அல்லது நிறுவனத்திற்கு தேவைப்படுகின்ற விவரங்கள் காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அவரின் சட்டப்பூர்வ பிரதிநதிகளால் சமர்ப்பிக்கப்படவேண்டும் மற்றும் அவை நிறுவனம் குறித்துரைக்கின்ற இயல்பு மற்றும் வடிவத்தில் இருக்கவேண்டும். உரிமக்கோரிக்கை உருவாவதற்கான இத்தகைய ஒரு நிகழ்வு / விபத்து நடைபெற்ற உடனேயே காப்பீடு செய்யப்பட்ட நபர், மருத்துவ சிகிச்சையைப் பெறவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், இதன் பின்விளைவுகளுக்கு நிறுவனம் எந்தவித கடப்பாடு பொறுப்பையும் கொண்டிருக்காது.

(iii) இப்பாலிசியின் கீழ், உரிமக்கோரிக்கை உருவாகியதற்கு அல்லது உருவாக வாய்ப்புள்ள எந்தவொரு நிகழ்வு நடைபெற்றவுடன் அது குறித்த அறிவிக்கையை காப்பீடு செய்யப்பட்ட நபர் உடனடியாக நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் மற்றும் வாய்மொழியாக

தெரிவிக்கப்பட்ட உரிமக்கோரிக்கைத் தொடர்பான அனைத்து எழுத்துப்பூர்வ அறிவிக்கை அல்லது தகவல் மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள எந்தவொரு வழக்குத் தொடர்பான சம்மன்கள் அல்லது பிற சட்டப்பூர்வ செய்முறை அறிவிப்புகளை நிறுவனத்திற்கு வழங்கவேண்டும் மற்றும் எந்தவொரு உரிமக்கோரிக்கைக்கு தீர்வு காண அல்லது அதை மறுக்க அல்லது மேல்நடவடிக்கைகளைத் தொடங்க நிறுவனத்திற்கு ஏதுவாக்கும் வகையில் அனைத்து அவசியமான தகவல் மற்றும் உதவிகளை வழங்கவேண்டும். நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு உரிமக்கோரிக்கைக்காகவும், எந்தவொரு செலவீனத்தையும் காப்பீடு செய்யப்பட்ட நபர் ஏற்கவோ / செய்யவோ கூடாது மற்றும் அத்தகைய அனுமதியில்லாமல் எந்தவொரு உரிமக்கோரிக்கைக்காகவும் பேரம் பேசவோ, பணம் வழங்கவோ / தீர்வு காணவோ, ஒத்துக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ கூடாது.

6. **பங்களிப்பு:** இப்பாலிசியின் கீழ், காப்பீடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு சொத்து இழப்பு அல்லது சேதம் நிகழ்கின்றபோது, அதே சொத்திற்கு காப்பீடு செய்யப்பட்ட நபரால் அல்லது அவர் இல்லாமல், இதன்மீது வேறு ஏதாவது காப்பீடு செய்யப்பட்டிருக்குமானால், அந்நேர்வின்போது எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கு அதன் விகிதாச்சார அளவுக்கும் அதிகமாக இழப்பீட்டைச் செலுத்தவோ அல்லது பங்களிக்கவோ நிறுவனம் கடப்பாடு பொறுப்பைக் கொண்டிருக்காது.

7. **மோசடி:** இப்பாலிசியின் கீழ், எந்தவொரு உரிமக்கோரிக்கையானது, எந்த வகையிலாவது மோசடியானதாக இருக்குமானால் அல்லது இப்பாலிசியின் கீழ் எந்தவொரு ஆதாயத்தைப் பெறுவதற்காக காப்பீடு செய்யப்பட்ட நபராலோ அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் சார்பாக செயல்படுகின்ற வேறுஎந்த நபராலோ மோசடியான வழிமுறைகள் அல்லது யுக்திகள் பயன்படுத்தப்படுமானால், இப்பாலிசியின் கீழ் கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாயங்கள் மற்றும் உரிமைகள் இழக்கப்பட்டுவிடும்.

8. **ஈட்டுறுதி:** நிறுவனமானது, இழப்பு அல்லது சேதத்திற்கான தொகையை வழங்குவதற்குப் பதிலாக, நிறுவனமானது அவ்வாறு இழந்த அல்லது சேதமடைந்த சொத்து அல்லது கட்டிடங்களை மாற்றித் தரவோ அல்லது பழுதுநீக்கித் தரவோ, மறுபடியும் பொருத்தித்தரவோ செய்யலாம் அல்லது இவ்வாறு செய்வதில் வேறு எந்த காப்பீட்டு நிறுவனத்துடனும் இணைந்து செயல்படலாம். ஆனால், சூழ்நிலைகள் அனுமதிக்கின்ற வரை மற்றும் நியாயமான அளவிற்கு போதுமான வகைமுறையில் இதை நிறுவனம் செய்யும். முழுமையாகவோ அல்லது அதைப்போலவே மாற்றித்தர நிறுவனத்திற்கு பொறுப்புறுதி இருக்காது. அதன்மீது காப்பீடு செய்யப்பட்ட தொகையைவிடவோ அல்லது அந்நிகழ்வு நடைபெற்றபோது அத்தகைய சொத்தினை மீண்டும் மாற்றித் தருவதற்கு ஆகக்கூடிய செலவீனத்தை விட அதிகமாக செலவிட நிறுவனம் பொறுப்புறுதி கொண்டிருக்காது.

9. **சராசரி:** (பிரிவு எண்கள் II, IV, V, VI – க்கு பொருந்தக்கூடியது) எந்தவொரு இழப்பு அல்லது சேதம் நடைபெற்ற நேரத்தில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தானது, அதன்மீது காப்பீடு செய்யப்பட்டத் தொகையைவிட ஒட்டுமொத்தமாக அதிக மதிப்புள்ளதாக இருக்குமானால், அந்த வேறுபாட்டிற்கு காப்பீடு செய்த நபரே அவரது சொந்த காப்பீட்டாளராக இருப்பதாக கருதப்படுவார்

மற்றும் அதற்கேற்ப இழப்பு அல்லது சேதத்தை விகிதாச்சார அளவில் ஏற்றுக்கொள்வார். இப்பாலிசி ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்குமானால், அவை ஒவ்வொன்றும் இந்நிபந்தனைக்கு தனித்தனியாக உட்பட்டதாக அமையும்.

10. **மத்தியஸ்தம் மற்றும் உரிமை மறுப்பு:** இப்பாலிசியின் கீழ் வழங்கப்பட வேண்டிய தொகையின் அளவு குறித்து ஏதேனும் சர்ச்சை அல்லது வேறுபாடு எழுமானால் (கடப்பாடு பொறுப்பு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலொழிய) அத்தகைய வேறுபாடானது, பிற அனைத்து கேள்விகளையும் பொருட்படுத்தாது, இரு தரப்பினராலும் எழுத்துப்பூர்வமாக நியமிக்கப்படும் ஒரேயொரு நடுவரின் (மத்தியஸ்தரின்) முடிவிற்கு விடப்படும் அல்லது தனிநபர் மத்தியஸ்தர் குறித்து இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், மத்தியஸ்தத்தைக் எந்தவொரு தரப்பாவது கோரிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அது மூன்று நபர்கள் அடங்கிய மத்தியஸ்த குழுவிடம் அனுப்பப்படவேண்டும். இக்குழுவில் இச்சர்ச்சை / வேறுபாடு உடைய தரப்பு ஒவ்வொன்றாலும் நியமனம் செய்யப்படும் ஒரு நபர் என இரு மத்தியஸ்தர்களும் மற்றும் இத்தகைய இரு மத்தியஸ்தர்களால் கலந்துபேசி நியமனம் செய்யப்படுகின்ற மூன்றாவது மத்தியஸ்தரும் அடங்குவர். இத்தகைய மத்தியஸ்தமானது, மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம் 1996 – விதிகளுக்கொப்ப மேற்கொள்ளப்படும்.

இந்த பாலிசி தொடர்பாக அல்லது இதன் கீழ் நிறுவனமானது கடப்பாடு பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அல்லது அது குறித்து சர்ச்சை எழுப்பினால், மேற்கூறப்பட்டபடி மத்தியஸ்தத்திற்கு எந்தவொரு வேறுபாடு அல்லது சர்ச்சையானது அனுப்பப்பட மாட்டாது என்பது தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது அல்லது புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இந்த பாலிசியின் மீது எந்தவொரு நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்வதற்கான எந்தவொரு உரிமைக்கும் முன்பாக, அத்தகைய மத்தியஸ்தர்கள் அல்லது இழப்பு அல்லது சேதத்திற்கான அளவு அல்லது தொகை என்பது மீது, நடுவர் வழங்கும் தீர்ப்பு அல்லது முடிவு முதலில் பெறப்பட வேண்டும் என்று இதன் வழியாக தெளிவாக குறிப்பிடப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

இதன் கீழ் செய்யப்படும் எந்த கேட்புரிம கோரிக்கையில் காப்பீடு செய்யப்பட்டவருக்கு பொறுப்புறுதியை ஏற்க இயலாது என நிறுவனம் தெரிவிக்குமானால், அத்தகைய பொறுப்புறுதி ஏற்பின்மையானது, நீதிமன்றத்தில் வழக்காக, அவ்வாறு தெரிவிக்கப்பட்ட 12 காலண்டர் மாதங்களுக்குள் அக்கோரிக்கை பதிவு செய்யப்படவில்லை எனில், அனைத்து நோக்கங்களுக்கும் அக்கோரிக்கையானது கைவிடப்பட்டுவிட்டது என்றே கருதப்படும் மற்றும் அதற்குப் பிறகு ஒருபோதும் கேட்டுப்பெற இயலாததாக ஆகிவிடும்.

11. **வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றி நடத்தல்:** இப்பாலிசியின் கீழ் உள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், காப்பீடு செய்யப்பட்ட நபரால் செய்யப்படவேண்டிய அல்லது பின்பற்றி நடக்கவேண்டியவையாக அவை இருக்கின்றபோது, அவற்றை முறையாக பின்பற்றி, அதன்படி செயல்படவேண்டிய பொறுப்பானது, இப்பாலிசியின் கீழ் எந்தவொரு இழப்பீட்டுத் தொகையையும் நிறுவனம் வழங்குவதற்கான கடப்பாடு பொறுப்பிற்கும் மேலான ஒரு நிபந்தனையாக காப்பீடு செய்த நபருக்கு இருக்கும்.

**பொருள் வரையறை:** கொள்ளை அல்லது வீட்டை உடைத்து திருடுவது என்ற சொற்றொடர், அத்துமீறல் மற்றும் வன்முறை முறைகளினால் காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்திற்குள் நுழைதல் அல்லது வெளியேறலினால் ஏற்பட்ட திருட்டு அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அவரின் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் அல்லது அவரின் எந்தவொரு பணியாளர் மீது நடைபெற்ற தாக்குதல் அல்லது வன்முறையைத் தொடர்ந்து நடைபெற்ற திருட்டு என்று பொருள் கொள்ளப்படும்.

**பொது விலக்குகள்**

காப்பீட்டு நிறுவனமானது, கீழ்வரும் விஷயங்கள் / நேர்வுகளுக்கு கடப்பாடு பொறுப்பினைக் கொண்டிருக்காது:

1. போர், படையெடுப்பு, வெளிநாட்டு பகைவரின் நடவடிக்கை, சண்டைகள் (போர் அறிவிப்பு செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும்) உள்நாட்டுப்போர், கிளர்ச்சி, புரட்சி, கலகம், இராணுவக்கிளர்ச்சி அல்லது அதிகாரபறிப்பு, அனைத்து மன்னர்கள், இளவரசர்கள் அல்லது எந்தவொரு நாடு, நிலை அல்லது தரம் எதுவாயினும் அதன் மக்களின் சிறைபிடிப்பு, கைப்பற்றல், கைது, கட்டுப்பாடுகள் அல்லது காவலில் வைப்பு ஆகியவற்றினால் அல்லது ஆகியவற்றிலிருந்து அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்

2. பயன்பாட்டினால் அல்லது மதிப்புக்குறைவதனால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

3. எந்த ஒரு வகையிலான அல்லது விவரணையின் கீழ், ஏற்படும் நிகழ்வின் தொடர்ச்சியாக விளைகின்ற இழப்பு

4. (a) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கதிர்வீச்சு அல்லது ஆதாரம் எதுவாக இருப்பினும் அதிலிருந்து கதிர்வீச்சு செயல்பாட்டினால் மாசுபடல் அல்லது அணுஆயுத பொருட்களிலிருந்து அல்லது பொருட்களினால் எந்தவொரு சொத்துக்கு விளைகின்ற அல்லது ஏற்படுகின்ற அல்லது உருவாகின்ற எந்தவொரு இழப்பு அல்லது சேதம் அல்லது நஷ்டம் அல்லது செலவு

(b) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அணுஆயுதப் பொருட்களினால் விளைகின்ற அல்லது பங்களிப்பினால் அல்லது அவற்றிலிருந்து ஏற்படக்கூடிய எந்தவொரு விபத்து, இழப்பு, அழிவு, சேதம் அல்லது சட்டப்பூர்வ பொறுப்பு

5. பயங்கரவாதம் மற்றும் நாசவேலை இடர்களினால் விளைகின்ற இழப்பு அல்லது சேதம்.

**பிரிவு I கட்டிடம் மற்றும் அதில் அடங்கியுள்ள பொருட்கள்**
**(பணம் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைத் தவிர்த்து)**

காப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களுக்குள் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் / கட்டிடத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனமானது கீழ்கண்டபடி ஈட்டுறுதி வழங்கும்:

**I. தீ**

கீழ்கண்டவற்றினால் சொத்துக்கு ஏற்பட்ட அழிவு அல்லது சேதத்தை தவிர்த்து

(a) (i) தானாக ஏற்பட்ட பொங்குதல், இயற்கையான வெப்பமேறல் அல்லது தன்னிச்சையாக நிகழ்கின்ற எரிதல்

(ii) எந்தவொரு வெப்பமேற்றல் அல்லது உலரவைத்தல் செய்முறை மேற்கொள்ளப்படும்போது

(b) எந்தவொரு அரசு / பொது அதிகாரம் கொண்ட நபரின் ஆணையின்பேரில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தானது எரிக்கப்படுதல்.

II. **மின்னல்**

III. **வெடித்தல் / உள்நோக்கி வெடித்தல்**

அதன் சொந்த வெடிப்பு அல்லது உள்நோக்கி வெடித்தலினால் மையவிலக்கு சக்திக்கு உட்பட்டு, (வீட்டு உபயோக பாய்லர்களைத் தவிர்த்து) பாய்லர்கள், எக்கானமைசர்ஸ் அல்லது நீராவி உருவாக்கப்படுகிற வேறு கொள்கலன்கள், இயந்திரங்கள் அல்லது பிற சாதனங்களுக்கு ஏற்படுகின்ற அழிவு அல்லது சேதத்தை தவிர்த்து.

IV. **விமானங்களினால் சேதம்**

அழுத்த அலைகளினால் ஏற்பட்டவற்றை தவிர்த்து, விமானம் பிற வாண்வெளி அல்லது விண்வெளி சாதனங்கள் மற்றும் அவற்றிலிருந்து விழுந்த பொருட்களினால் ஏற்பட்ட அழிவு அல்லது சேதம்

V. **கலவரம், வேலைநிறுத்தம் மற்றும் தீங்கு விளைவிக்கும் சேதம்**

வெளியார்ந்த வன்செயல்முறைகளினால் காப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது அழிவு அல்லது கண்ணுக்குத் தெரிகின்ற பொருட்சேதம்: ஆனால், கீழ்கண்டவைகளினால் விளைந்தவற்றை தவிர்த்து:

a) முழுமையான அல்லது பகுதி அளவிலான பணிநிறுத்தம் அல்லது எந்தவொரு செய்முறை அல்லது இயக்கங்களின் நிறுத்தம் அல்லது அவை மீது குறுக்கீடு அல்லது தடை ஏற்படுத்துவது அல்லது எந்தவொரு வகையிலான செய்யத் தவறிய நடவடிக்கைகள்

b) அரசு அல்லது எந்தவொரு சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட அதிகார அமைப்பின் ஆணையால் செய்யப்படுகின்ற பறிமுதல், நிர்ப்பந்தமாக எடுத்துக்கொள்ளுதல், கோரிக்கை அல்லது அழிவு ஆகியவற்றினால் விளைகின்ற நிரந்தர அல்லது தற்காலிக இருப்பினை இழத்தல்

c) அத்தகைய கட்டிடம் அல்லது தொழிலகம் அல்லது பிரிவு அல்லது இயந்திரத்தை எந்தவொரு நபரின் சட்டத்திற்குப் புறம்பான ஆக்கிரமிப்பு அல்லது அவற்றிற்கான அணுகுவசதியை தடை செய்ததினால், அந்த கட்டிடம் அல்லது தொழிலகம் அல்லது பிரிவு அல்லது இயந்திரத்திலிருந்து நிரந்தர அல்லது தற்காலிக இருப்பு இழத்தல்

d) எந்தவொரு நபரால், எந்தவொரு தீங்கு விளைவிக்கும் செயல்பாடாக கொள்ளையடித்தல், கதவுடைத்து திருடுதல், திருட்டு, சிறுதிருட்டு அல்லது இத்தகையதொரு முயற்சி அல்லது எந்தவொரு வகையிலான செய்யத்தவறிய நிலை (அத்தகைய செயலானது, புது அமைதியை கெடுப்பதற்காக செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்)

இழப்பு அல்லது சேதமானது, எந்தவொரு தீங்கு விளைவிக்கும் செயல்பாட்டினால் ஏற்படவில்லை என்று நிறுவனம் கருத்து தெரிவிக்குமானால், அதற்கு மாறான நிலையை நிரூபிப்பதற்கான பொறுப்பானதுக, காப்பீடு செய்யப்பட்ட நபரைச் சார்ந்ததாகும்.

VI. **புயல், சூறாவளி, சுழற்காற்று, பெருங்காற்று, புயல்காற்று, வெள்ளம் மற்றும் வெள்ளப்பெருக்கு**

VII. **மோதலினால் ஏற்படும் சேதம்**

**(a)** காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அக்கட்டிடத்தில் தங்கியிருப்பவரால் அல்லது

**(b)** தங்களது பணி செயல்பாட்டின் போது அவர்களது பணியாளர்களால் பணியாற்றும்போது

VIII. **அமிழ்தல் மற்றும் பாறைச்சரிவு உட்பட, மண்சரிவு**

கீழ்கண்டவற்றை விலக்கி, சொத்து (கட்டிடம்) இருக்கின்ற அமைவிடத்தின் ஒரு பகுதி பூமியில் அமிழ்ந்து விடுவதால் அல்லது மண்சரிவு / பாறைச்சரிவால் ஏற்பட்ட சேதம் அல்லது அழிவு

(a) புதிய கட்டிட அமைப்புகளின் வழக்கமான விரிசல், பூமியில் தளம் இறங்குதல்

(b) உருவாக்கப்பட்ட தரைத்தளம் நகர்தல் அல்லது இறங்குதல்

(c) ஆறு அல்லது கடலோரப் பகுதிகளில் மண்அரிப்பு

(d) குறைபாடுள்ள வடிவமைப்பு அல்லது கட்டிடப்பணி அல்லது குறைபாடுள்ள பொருட்களை பயன்படுத்தியது

(e) கட்டிடதகர்ப்பு, கட்டுமானப்பணி, எந்தவொரு கட்டிடம் அல்லது தளஅமைப்புபணி அல்லது தோண்டுதல் பணி, கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் அல்லது மராமத்துபணி

(IX) **நீர்த்தொட்டிகள், சாதனங்கள் மற்றும் குழாய்கள் உடைதல் மற்றும் / அல்லது நிரம்பிவழிதல்**

**(X) ஏவுகணை பரிசோதனை செயல்பாடுகள்**

**(XI) தானியங்கி நீர்த்தெளிப்பான் அமைப்புகளிலிருந்து கசிவு**

கீழ்கண்டவற்றினால் விளைந்த அழிவு அல்லது சேதத்தை விலக்கி / தவிர்த்து

(a) கட்டிடங்கள் அல்லது வளாகம் மீது செய்யப்படும் மாற்றங்கள் அல்லது மராமத்து பணிகள்

(b) நீர்த்தெளிப்பான் அமைப்பை சரிசெய்யும் பணி, அதை அகற்றுதல் அல்லது விரிவுபடுத்துதல்

(c) காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு முன்பே தெரிந்திருந்த கட்டுமானப் பணியின் குறைபாடுகள்

(XII) **புதர் தீ**

காட்டுத்தீயினால் விளைந்த அழிவு அல்லது சேதத்தை விலக்கி / தவிர்த்து

(XIII) **நிலநடுக்கம் (தீயால் ஏற்பட்ட அழிவு அல்லது சேதத்தை உள்ளடக்கி)**

**கட்டாய பிடித்தங்கள் (கூடுதல் தொகை)**

a) இப்பாலிசியின் கீழ், மின்னல், நிலநடுக்கம், பூமியில் அமிழ்தல், நிலச்சரிவு, பாறைச்சரிவு போன்ற கடவுளின் கைச்செயல் அல்லது இயற்கையின் சீற்றங்களின் காரணமாக உருவாகின்ற ஒவ்வொரு இழப்பிற்காகவும் ஒவ்வொரு உரிமக்கோரிக்கையிலும் முதல் 5% கட்டாயப்பிடித்தமாக இருக்கும். குறைந்தபட்சம் ரூ.10,000 மற்றும் அதிகபட்சமாக ரூ.25,000 என்ற வரையறைக்கு உட்பட்டதாக இது இருக்கும்.

b) இப்பாலிசியின் கீழ், காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு ஈட்டுறுதி செய்யப்பட்டுள்ள பிற பிற ஆபத்துகளின் காரணமாக உருவாகின்ற ஒவ்வொரு இழப்பிற்கும் முதல் 10,000 ரூபாய்.

**சிறப்பு விலக்குகள்**

கீழ்கண்ட நேர்வுகளில் / விஷயங்களுக்கு நிறுவனம் கடப்பாடு பொறுப்பேற்காது.

a) விலங்குகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் மிதிவண்டிகளுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

b) பணம், செக்யூரிட்டிகள், தங்கம் அல்லது வெள்ளி நகைகள், அல்லது விலையுயர்ந்த கற்கள் கையெழுத்துப் பிரதிகள், பத்திரங்கள், கடன் பத்திரங்கள், பரிவர்த்தணைப் பத்திரங்கள், வங்கி / கருவூல அல்லது பிராமிசரி நோட்டுகள், அஞ்சல் தலைகள், அஞ்சல்தலை தொகுப்புகள், வர்த்தக கணக்குப் புத்தககங்கள், தாள்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

c) கூடுதல் பிரிமியத் தொகையை செலுத்தியதன் மூலம், பயங்கரவாத செயலினால் ஏற்படும் சேதத்திற்கும் சேர்த்து காப்பீடு செய்யப்பட்டிருந்தாலொழிய, விலக்கப்படுகின்ற வாரண்ட்டியின்படி பயங்கரவாதத்தினால் ஏற்படும் சேதம்.

**சராசரிக்கான சிறப்பு நிபந்தனை**

இதன் வழியாக காப்பீடு செய்யப்பட்ட சொத்து, தீ விபத்து தொடங்கும்போது அல்லது இங்கு காப்பீடு செய்யப்பட்ட வேறு எந்த ஆபத்தின் காரணமாக, அழிவு அல்லது சேதம் ஏற்படத் தொடங்கும்போது, அதன்மீது காப்பீடு செய்யப்பட்ட தொகையை விட, கூடுதல் மதிப்பிற்கு அவை இருக்குமானால், வேறுபடுகின்ற இந்த தொகைக்கு காப்பீடு செய்த நபரே அவரது சொந்த காப்பீட்டாளர் என்று கருதப்படும். மற்றும் ஏற்பட்ட இழப்பிற்கு அதற்கேற்ற விகிதாச்சார கணக்கீட்டின்படி, அவரும் பொறுப்பேற்பார். எனினும், தீ அல்லது அழிவு அல்லது சேதம் தொடங்கும்போது, காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் மீதான காப்பீட்டுத் தொகையானது, காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் ஒட்டுமொத்த மதிப்பில் 85%-க்கும் குறையாமல் இருக்குமானால், இந்த சிறப்பு நிபந்தனையானது எந்த நோக்கத்தையும், விளைவையும் ஏற்படுத்தாது.

## பிரிவு II – கட்டிடங்களில் இருக்கின்ற பொருட்களை கொள்ளையடித்தல் மற்றும் வீட்டை உடைத்து திருடுதல்

### (பணம் மற்றும் விலைமதிப்புள்ள பொருட்களைத் தவிர்த்து)

காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தில் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தபோது கொள்ளையடித்தல் மற்றும் அல்லது வீடுடைத்து திருடுதலின் வழியாக அப்பொருட்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்திற்காக காப்பீடு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு ஈட்டுறுதியை வழங்கும்.

### சிறப்பு விலக்குகள்

கீழ்கண்ட நேர்வுகளில் / விஷயங்களுக்கு நிறுவனம் கடப்பாடு பொறுப்பேற்காது:

i. காப்பீடு செய்யப்பட்ட நபரின் பணியாளர்களோ அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் குடும்பத்தைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரோ கொள்ளையடித்தல் மற்றும் அல்லது வீடுடைத்து திருடுதலில் பிரதான நபராகவோ அல்லது உதவி செய்தவராகவோ இருந்திருந்தால், அதனால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

ii. விலங்குகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் மிதிவண்டிகளுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

iii. குறிப்பாக அறிவிக்கை செய்யப்பட்டிருந்தாலொழிய, பணம், செக்யூரிட்டிகள், தங்கம் அல்லது வெள்ளி நகைகள், அல்லது விலையுயர்ந்த கற்கள் கையெழுத்துப் பிரதிகள், பத்திரங்கள், கடன் பத்திரங்கள், பரிவர்த்தணைப் பத்திரங்கள், வங்கி / கருவூல அல்லது பிராமிசரி நோட்டுகள், அஞ்சல் தலைகள், அஞ்சல்தலை தொகுப்புகள், வர்த்தக கணக்குப் புத்தககங்கள், தாள்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

## பிரிவு III – பணத்திற்கான காப்பீடு

கீழ்கண்ட விஷயங்கள் அல்லது நேர்வுகளில் நிறுவனமானது காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு ஈட்டுறுதியை வழங்கும்.

a) காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்திலிருந்து 15 மைல் ஆரத்திற்குள் எந்த இரு இடங்களுக்கு இடையே எடுத்துச் செல்லும்போது காப்பீடு செய்யப்பட்ட பணமானது, காப்பீடு செய்யப்பட்ட நபரின் கைகளிலோ அல்லது அவரது பணியாளர்கள் கைகளிலோ இருக்கும்போது, துரதிருஷ்டவசமாக விபத்தினால் இழக்கப்படும்போது

b) உடைத்து திருட கடினமான பணப்பெட்டகத்தில் அல்லது ஸ்டீல் பீரோக்களில் / பணப்பெட்டியில் அல்லது வேறு எந்த இடங்களிலாவது பூட்டப்பட்டு பாதுகாப்பாக வைத்திருந்த பணம் மற்றும் அல்லது விலைமதிப்புள்ள பொருட்களுக்கு கொள்ளையடித்தல் மற்றும் அல்லது வீடுடைத்து திருடுதலின் வழியாக ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்.

c) காசாளரின் கல்லாப்பெட்டி மற்றும் அல்லது கவுண்ட்டரில் காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தில் வேலை நேரங்களின்போது இருந்த பணம் இழக்கப்படுவது அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபர் மீது அல்லது அவரின் எந்தவொரு பணியாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்தியதை தொடர்ந்து கொள்ளையடித்தல் மற்றும் வீடுடைத்து திருடுதலின் வழியாக பணம் இழக்கப்படுவது. ஆனால், இத்தகைய நேர்வில் இழக்கப்பட்ட பணமானது, பணத்தை கையாளுகின்ற பணிக்காக பணியமர்த்தப்பட்ட, பொறுப்புள்ள ஒரு பணியாளரின் கைவசத்தின் கீழ் அத்தகைய பணம் இருந்திருக்க வேண்டும்.

**கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு எப்போதும் உட்பட்டதாக இவை இருக்கும்:**

1. கொள்ளையடித்தல் அல்லது வீடுடைத்து திருடுதல் என்ற சம்பவம் நடைபெற்ற இரண்டு நாட்கள் காலஅளவிற்குள் கண்டுபிடிக்கப்படாத மற்றும் உடனடியாக எழுத்துப்பூர்வமாக நிறுவனத்திற்கு தகவல் அளிக்கப்படாத எந்தவொரு நிகழ்விலும் காப்பீட்டு நிறுவனமானது, இப்பாலிசியின் பிரிவு 111(a) –ன் கீழ் வரக்கூடிய எந்தவொரு இழப்பிற்கும் கடப்பாடு பொறுப்பு ஏற்காது.

2. பணப்பெட்டகத்தில் அல்லது ஸ்டீல் பீரோக்களில் / பணப்பெட்டியில் அல்லது வேறு எந்த இடங்களிலாவது பூட்டப்பட்டு பாதுகாப்பாக வைத்திருந்த பணத்திற்கான முழுமையான கணக்கானது, காப்பீடு செய்யப்பட்ட பணம் வைக்கப்பட்டிருக்கின்ற இடத்தை தவிர்த்து வேறு ஏதாவது இடங்களில் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டும் மற்றும் இப்பிரிவின் கீழ், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மிஞ்சாதவாறும் அத்தகைய கணக்கு ஆவணங்களில் உண்மையில் காட்டப்பட்டுள்ள கணக்கிற்கு உட்பட்டுமே நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பு இருக்கும்.

**சிறப்பு விதிவிலக்குகள்**

a) காப்பீடு செய்யப்பட்ட நபரின் பணியாளர்களோ அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் குடும்பத்தைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரோ, பணத்தை எடுத்துச் செல்கின்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணியாளர்களின் நேர்மையின்மை அல்லது மோசடிச் செயலுக்கு காரணமாக இருக்கும்போது அல்லது அதன் காரணமாக உருவாகின்ற அல்லது இச்செயலுக்கு காரணமான பிரதான நபராகவோ அல்லது உதவிய நபராகவோ இருக்கும்போது ஏற்படுகின்ற பணஇழப்பு.

b) பிழை அல்லது செய்யத்தவறிய செயலின் காரணமாக ஏற்பட்ட பற்றாக்குறை (சார்ட்டேஜ்)

c) தாக்குதல் அல்லது வன்முறை அல்லது எந்தவொரு அச்சுறுத்தலின் காரணமாக பணப்பெட்டகத்திற்கான சாவி நிர்ப்பந்தமாக பெறப்பட்டிருந்தாலொழிய, காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு சொந்தமான அத்தகைய பணப்பெட்டகத்தின் சாவி அல்லது அதன் மாற்றுச்சாவி பயன்பாட்டைத் தொடர்ந்து அப்பெட்டகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பணஇழப்பு.

**பிரிவு IV – பெடல் சைக்கிள்கள்**

A. காப்பீடு செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான பெடல் சைக்கிள்களுக்கு கீழ்வரும் காரணங்களால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்காக காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனமானது ஈட்டுறுதி வழங்கும்:

   a) தீ, மின்னல் அல்லது வெளியார்ந்த வெடிவிபத்து

   b) கலவரம், வேலைநிறுத்தம் அல்லது தீங்கு விளைவிக்கும் செயல்பாடு

   c) நிலநடுக்கம், அதனால் ஏற்படும் தீ மற்றும் / அல்லது அதிர்வு

   d) வெள்ளம், வெள்ளத்தில மூழ்குதல், புயல், சூறாவளி அல்லது இதுபோன்ற பிற பெருங்காற்று

   e) கொள்ளையடித்தல் மற்றும் / அல்லது வீடுடைத்து திருடுதல் அல்லது திருட்டு

   f) எதிர்பாராத விதமாக நிகழும் வெளியார்ந்த வழிமுறைகள்

காப்பீட்டிற்கான எந்தவொரு காலஅளவிலும், எந்தவொரு வாகனத்திற்கான இழப்பு அல்லது சேதம் குறித்து நிறுவனத்தின் ஈட்டுறுதி பொறுப்பானது, அத்தகைய வாகனத்திற்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு அதிகமாக இருக்காது.

B. காப்பீடு செய்யப்பட்ட நபரின் குடும்பத்தின் உறுப்பினராகவோ அல்லது அவரின் கீழ் பணியில் உள்ள நபராகவோ இல்லாத வேறு எந்த நபருக்காவது எதிர்பாராத இறப்பு அல்லது உடல் ரீதியான காயம் ஏற்படும்போது நிறுவனத்தின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலின்பேரில், இது தொடர்பாக காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு இழப்பீடு மற்றும் வழக்குகளுக்கான செலவீனத்தை செலுத்த சட்டப்பூர்வமாக பொறுப்பேற்கின்ற நிலையில் இதற்கான அனைத்து தொகைகளையும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனம் ஈட்டுறுதி செய்யும். இங்கு காப்பீடு செய்யப்பட்ட எந்தவொரு பெடல் சைக்கிள் தொடர்பாக அல்லது வழியாக நிகழ்கின்ற அல்லது அந்த சைக்கிளை கொண்டு செல்லப்படும்போது நிகழ்ந்த விபத்தின் காரணமாக, காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமில்லாத வேறு சொத்துக்கு விபத்து காரணமாக சேதம் ஏற்படும்போது அதற்கான இழப்பீடு மற்றும் வழக்கிற்கான செலவையும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனம் கொடுக்க பொறுப்புள்ளதாக இருக்கும். ஆனால், இத்தகைய இழப்பீடு மற்றும் வழக்கிற்கான செலவிற்கான நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பானது, எந்தவொரு காப்பீட்டு காலஅளவின்போதும் ரூபாய் 10,000-ற்கு உட்பட்டதாகவே அமையும்.

### சிறப்பு விலக்குகள்

இந்த பாலியின் கீழ், கீழ்கண்டவற்றிற்கு கம்பெனி கடப்பாடு அல்லது பொறுப்பைக் கொண்டிருக்காது:-

(i) வாடகைக்கு அல்லது ஆதாய பரிசிற்காக அல்லது இந்தியாவிற்கு வெளியே பெடல் சைக்கிள் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய பெடல் சைக்கிள் தொடர்பாக அல்லது வழியாக அல்லது அதனால் ஏற்பட்ட எந்தவொரு விபத்து, காயம், இழப்பு, சேதம் அல்லது கடன் பொறுப்பு

(ii) அளவுக்கு மீறிய சுமையேற்றல், அழுத்தம் அல்லது இயந்திர ரீதியிலான செயலிழப்பு ஆகியவற்றால் விளைந்த சேதம்

(iii) அதே வேளையில் பெடல் சைக்கிளும் திருடப்பட்டிருந்தாலொழிய, திருட்டின் காரணமாக அதன் துணைப்பொருட்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்

(iv) பந்தயத்திற்காக அல்லது விரைவுப் போட்டிக்காக பயன்படுத்தப்படும்போது ஏற்படுகின்ற இழப்பு அல்லது கடப்பாடு பொறுப்பு

(v) இதன் துணைப்பிரிவு (A) – ன் கீழ் உருவாகின்ற ஒவ்வொரு இழப்பிற்கும் முதல் 10 ரூபாய். எனினும் இந்த இழப்பு அல்லது சேதத்தின் மதிப்பு ரூ.10-க்கும் அதிகமாக இருக்கும்போது அத்தகைய இழப்பு அல்லது சேதத்திற்கு முழுத் தொகையும் செலுத்துவதற்கு நிறுவனம் பொறுப்புள்ளதாக இருக்கும்.

### சிறப்பு நிபந்தனைகள்

கவனித்துக்கொள்ள யாரும் இல்லாத நேர்வின்போது பெடல் சைக்கிள் பூட்டப்பட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும்:

## பிரிவு IV – தட்டு கண்ணாடி

காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தில் எதிர்பாராத உடைதலின் காரணமாக, பொருத்தப்பட்டுள்ள தட்டு கண்ணாடிக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்காக காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனம் ஈட்டுறுதி வழங்கும். ஆனால், ஒரு காப்பீட்டு காலஅளவின்போது ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பிற்கும், அது ஒரு இழப்பாகவோ அல்லது பல இழப்புகளாகவோ இருந்தாலும் சரி, வழங்கப்படும் இழப்பீடானது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காப்பீட்டு தொகைக்கு உட்பட்டதாகவே அமையும்.

**சிறப்பு விலக்குகள்**

கீழ்வரும் நேர்வுகள் அல்லது விஷயங்களுக்கு நிறுவனம் கடப்பாடு பொறுப்பேற்காது:

i. காப்பீடு செய்யப்பட்ட வளாகத்திற்குள்ளோ அல்லது பக்கத்திலோ தட்டு கண்ணாடிகளை அகற்றும்போதோ, மாற்றியமைக்கும்போதோ அல்லது பழுது பார்க்கும்போதோ ஏற்படும் உடைதல் மற்றும் சேதம்.

ii. கண்ணாடி உடையும்போது அல்லது சேதமடையும்போது அதனோடு உடன் இணைந்து நிகழாத லெட்டரிங் உடைதல்

iii. அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய, சட்டங்கள் (பிரேம்கள்) அல்லது எந்த வகையிலான ஃபிரேம்ஓர்க் மீது சேதம் அல்லது உடைதல்

iv. கண்ணாடியின் முழு தடிமானம் முழுவதிலும் காணப்படுகின்ற கீறலைத் தவிர்த்து, கண்ணாடியில் காணப்படும் சிறுகீறல், மங்கலாகத் தெரிதல் அல்லது சேதம்.

v. காப்பீட்டில் விசேஷமாக குறிக்கப்பட்டிருந்தாலொழிய, சாதாரண சமதள பளபளக்கும் கண்ணாடியாக அல்லாத புடைப்புள்ள கண்ணாடிகள், வெள்ளிமுலாம் பூசப்பட்டவைகள், எழுதப்பட்ட கண்ணாடிகள், அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிகள், வளைவு கண்ணாடிகள் போன்றவை

vi. முழுமையாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் பொருத்தப்படாத கண்ணாடி உடைதல்

vii. கண்ணாடி உடைந்ததனால் அல்லது அதனை மாற்றிப் பொருத்தும்போது ஏற்படுகின்ற காயம் அல்லது இழப்பு அல்லது சேதம் அல்லது இதன் காரணமாக வர்த்தகத்தில் இடையூறு அல்லது தாமதத்தினால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

**பிரிவு VI - : நியான் விளம்பரப்பலகை / குளோசைன்:**

காப்பீடு செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான நியான் விளம்பரப் பலகை, குளோசைன் பலகைகளுக்கு கீழ்கண்ட காரணங்கள் / வழிகளினால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்திற்காக காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு நிறுவனமானது ஈட்டுறுதியை வழங்கும்.

a) எதிர்பாராத வெளியார்ந்த வழிமுறைகளினால்

b) தீ, மின்னல் அல்லது வெளியார்ந்த வெடிப்பு அல்லது திருட்டு

c) கலவரம், வேலைநிறுத்தம் அல்லது தீங்கு விளைவிக்கும் செயல்பாடு

d) வெள்ளம், வெள்ளத்தில மூழ்குதல், புயல், சூறாவளி அல்லது இதுபோன்ற பிற பெருங்காற்று

காப்பீட்டிற்கான எந்தவொரு காலஅளவிலும் ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பு அல்லது அனைத்து இழப்புகளுக்குமான நிறுவனத்தின் ஈட்டுறுதி பொறுப்பானது, அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு உட்பட்டதாக இருக்கும்.

**சிறப்பு விலக்குகள்**

மின்சார சார்ட் சர்க்யூட் அல்லது ஆர்க்கிங் அல்லது வேறுஎந்த இயந்திர ரீதியான அல்லது மின்சார செயலிழப்பு அல்லது குறைபாடுகளினால் எந்தவொரு பல்புகள் அல்லது டியூப்கள் எரிந்துவிடுவது அல்லது பியூஸ் போய்விடுவதனால் ஏற்படும் இழப்புகள்.

## பிரிவு VII – பேகேஜ்

கீழ்வரும் நேர்வுகளில் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு இழப்பீட்டை / ஈட்டுறுதியை வழங்கும்:

i. வர்த்தகம் தொடர்பாக காப்பீடு செய்யப்பட்ட நபர் மற்றும் / அல்லது அவரது பணியாளரால் கொண்டு செல்லப்படும் பேகேஜ்

ii. இந்தியாவில் எந்தவொரு இடத்திலும் விபத்தினால் அல்லது துரதிருஷ்டத்தினால் காப்பீடு செய்யப்பட்ட நபரின் அல்லது அவரது கூட்டாளிகளின் தனிப்பட்ட பேகேஜ்க்கு ஏற்பட்ட இழப்பு, அழிவு அல்லது சேதம்

தொலைந்த, அழிந்துபோன, சேதமடைந்த சொத்துக்கான நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பானது அத்தகைய இழப்பு நிகழ்கின்ற நேரத்தில் அச்சொத்துக்கு இருந்த உண்மையான மதிப்பிற்கு உட்பட்டதாகவே அமையும் என்றபோதிலும், அட்டவணையில் அப்பொருட்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு தொகைக்கு அக்காப்பீட்டு காலஅளவின்போது மிகைபடாமல் இருக்கும்.

கீழ்வரும் நேர்வுகளில் / விஷயங்களுக்கு நிறுவனம் கடப்பாடு பொறுப்பினைக் கொண்டிருக்காது:

a) பயணம் செய்கின்ற வாகனத்திற்கு (கப்பல், விமானம், இரயில்) விபத்து ஏற்பட்டு, அதனால் உடன் எடுத்துச் செல்கின்ற பீங்கான் பாத்திரங்கள், கண்ணாடி, கேமராக்கள், பைனாக்குலர்கள், லென்ஸ்கள், சிற்பங்கள், பழமையான பொருட்கள், படங்கள், இசைக்கருவிகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் எளிதில் உடையத்தக்க / நொறுங்கும் இயல்புகொண்ட இதைப்போன்ற பிற பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்தை தவிர, கீறல்கள், உராய்வு மற்றும் உடைந்துபோதலினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

b) துவைத்தல், சாயமேற்றல், பழுது நீக்குதல், புதுப்பித்தல் ஆகிய எந்தவொரு செய்முறையினால் அல்லது பயன்படுத்தலினால் மற்றும் அந்துப்பூச்சி, சிறுபூச்சிகள், பூசணம் அல்லது வேறுஎந்த படிப்படியாக செயல்படக்கூடிய காரணத்தினால் ஏற்படுகின்ற சேதம் மற்றும் தேய்மானம்.

c) நீண்டநேர இயக்கம், அளவுக்குமீறிய அழுத்தம், ஷார்ட் சர்க்யூட், ஆர்க்கிங், சுயவெப்பமடைதல் அல்லது எந்தவொரு காரணத்தினாலும் (மின்னல் உட்பட) ஏற்படுகின்ற மின்கசிவு ஆகியவற்றால் எந்தவொரு மின்இயந்திரம், சாதனங்கள், பிறமின்பயன்பாட்டு சாதனங்களின் (கம்பியில்லா வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி பெட்டிகள், டேப்ரெக்கார்டர்கள் உட்பட) இழப்பு அல்லது அவற்றிற்கான சேதம்.

d) வாட்ச்கள் மற்றும் கிளாக்குகளுக்கு ஓவர் வைண்டிங்கால் இழப்பு அல்லது சேதம் அல்லது இயந்திர ரீதியிலான தவறான பொறுப்புகளினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

e) அனைத்து நேரங்களிலும் அனைத்து கதவுகள், ஜன்னல்கள் மற்றும் திறப்பு வசதிகள் பாதுகாப்பாக பூட்டப்பட்டு மற்றும் முறையாக சாத்தப்படும் வசதிகொண்ட, முழுமையாக மூடப்படக்கூடிய சலூன் வகையின காரைத் தவிர்த்து, வேறு எந்த காரில் இருந்தும் திருடப்படுதல்.

f) ஒப்பந்தத்தின் கீழ் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்லும் ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு வாகனத்திலும் எடுத்துச் செல்லும்போது ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்

g) பணம், கடனீட்டு ஆவணங்கள், கையெழுத்துப்படி, பத்திரங்கள், கடன்பத்திரங்கள், பாண்டுகள், மாற்று உண்டியல்கள், கடனுறுதி ஆவணம், பங்குப் பத்திரங்கள், அஞ்சல் தலைகள், பயண டிக்கெட்டுகள் அல்லது பயணிகளின் காசோலைகள் வர்த்தக கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் இழப்பு அல்லது அவைகளுக்கு ஏற்படும் சேதம்.

h) குறிப்பாக அறிவிக்கப்பட்டு மற்றும் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, பயணம் தொடங்கியபோது உடன் எடுத்துச் செல்கின்ற பேகேஜ்-ன் ஒரு அங்கமாக இருந்திராத பொருட்களின் இழப்பு அல்லது அவற்றிற்கு சேதம்

i) அழியக்கூடிய மற்றும் கெட்டுப்போகக்கூடிய பொருட்களின் இழப்பு, அழிவு அல்லது அவற்றிற்கு சேதம்

j) ஒரு நபர் தன்மீது அணிந்துகொள்கின்ற அல்லது எடுத்துச் செல்கின்ற பொருட்கள் அல்லது பயணத்தின்போது பயன்படுத்துகின்ற கைத்தடிகள், குடைகள், சன் ஷேடுகள், விசிறிகள், நாற்காலிகள் அல்லது வேறுஎந்த பொருட்கள் போன்ற தனிப்பொருட்கள்

k) திரவங்கள், எண்ணெய்கள் அல்லது ஆபத்தான அல்லது சேதம் ஏற்படுத்தும் இயல்புகொண்ட இதைப்போன்ற பிற பொருட்கள் கசிவதனால், சிந்துவதனால் அல்லது வெளியேறுவதனால் ஏற்படும் அல்லது விளைகின்ற இழப்பு, நாசம் அல்லது சேதம்.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. இதன்கீழ் காப்பீடு செய்யப்படும் எந்தவொரு பொருட்களானவை, ஜோடிகளாகவோ அல்லது இணைகளாகவோ இருக்கின்றபோது, அத்தகைய பொருள் அல்லது பொருட்கள், அத்தகைய ஜோடி அல்லது இணையின் ஒரு பகுதியாக கொண்டிருக்கக்கூடிய எந்தவொரு சிறப்பு மதிப்பையும் கருத்தில் கொள்ளாமல், தொலைந்துபோன அல்லது சேதமான ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது பகுதிகளின் மதிப்பிற்கு மேல் இதற்கான நிறுவனத்தின் பொறுப்பானது, அதிகமாக இருக்காது அல்லது ஜோடி அல்லது இணைகளாக உள்ள பொருட்களின் காப்பீடு செய்யப்பட்ட மதிப்பின் அளவில் அப்பகுதிக்கான விகிதாச்சார அளவைவிட அதிகமாக இருக்காது.

## பிரிவு VIII – தனிநபர் விபத்து

இப்பாலிசி செல்லுபடியாகக்கூடிய காலகட்டத்தில் எந்தவொரு நேரத்திலும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள, 5-70 ஆண்டுகள் வயதிற்கு உட்பட்ட காப்பீடு செய்யப்பட்ட நபர், வெளியார்ந்த, வன்முறையிலான மற்றும் தெரியக்கூடிய வழிவகைகளினால் விளைந்த விபத்திலிருந்து நேரிடையாக மற்றும் அதன் காரணமாக மட்டும் விளையும் எந்தவொரு உடல் ரீதியிலான காயம் நேருமானால், காப்பீடு செய்த நபருக்கு அல்லது அவரது சட்டப்பூர்வ பிரதிநிதி/களுக்கு நிறுவனமானது, இதன் கீழே குறிக்கப்பட்டுள்ளபடி காப்பீட்டுத் தொகையை வழங்கும்.

a) அத்தகைய ஒரு காயம், விபத்து நிகழ்ந்த பனிரெண்டு காலண்டர் மாதங்களுக்குள், காப்பீடு செய்த நபரின் மரணத்திற்கு ஒரே மற்றும் நேரடி காரணமாக இருக்குமானால், ஷெட்யூலில் இந்த ஷரத்தின் கீழ், குறிக்கப்பட்டுள்ள தொகையானது ஷெட்யூலில் காண்பிக்கப்பட்டுள்ள நியமன நபருக்கு வழங்கப்படும்.

b) அத்தகைய ஒரு காயம், விபத்து நிகழ்ந்த பனிரெண்டு காலண்டர் மாதங்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையான மற்றும் திரும்பப்பெற இயலாதவாறு இழப்பிற்கு ஒரே மற்றும் நேரடி காரணமாக இருக்குமானால்,

i. இரு கண்களின் பார்வையை முற்றிலுமாகவும், மீட்க இயலாதவாறு இழப்பு அல்லது இரு கைகள் அல்லது இரு கால்கள் அல்லது ஒரு முழு கை மற்றும் ஒரு முழு கால் அல்லது ஒரு கண்ணில் பார்வையிழப்பு மற்றும் ஒரு முழு கால் அல்லது ஒரு கண் மற்றும் ஒரு முழு கையின் பயன்பாட்டை இழக்க நேருமானால், அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையானது வழங்கப்படும்.

ii. இரு கைகள் அல்லது இரு கால்களின் பயன்பாடு அல்லது ஒரு கை அல்லது ஒரு காலின் பயன்பாடு அல்லது ஒரு கண்ணின் பார்வையிழப்பு, ஒரு கை அல்லது ஒரு காலில் பயன்பாட்டிழப்பு நேருமானால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

C. அத்தகைய ஒரு காயம், விபத்து நிகழ்ந்த பனிரெண்டு காலண்டர் மாதங்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையான மற்றும் திரும்பப்பெற இயலாதவாறு இழப்பிற்கு ஒரே மற்றும் நேரடி காரணமாக இருக்குமானால்,

i. ஒரு கண்ணில் பார்வையிழப்பு அல்லது ஒரு முழு கை அல்லது ஒரு முழு கால் உடலிலிருந்து பிரிக்கப்படுவதால் ஏற்படும் உண்மையான இழப்பு நேர்வின்போது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையில் 50% வழங்கப்படும்.

ii. உடலிலிருந்து பிரித்தெடுக்கப்படாமல், ஆனால் ஒரு கை அல்லது ஒரு காலின் முழுமையான மற்றும் மீட்கஇயலாத இழப்பு நேர்வின்போது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையில் 50% வழங்கப்படும்.

**குறிப்பு:** மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்துகள் B மற்றும் C – ல் குறிப்பிடப்பட்டுள்ள உடலிலிருந்து கை என்பதற்கு மணிக்கட்டு அல்லது அதற்கு மேலே பிரித்தெடுக்கப்படுவது என்றும் அல்லது பிரித்தெடுக்கப்படுகின்ற கால் என்பதற்கு கணுக்காலில் அல்லது அதற்கு மேல் பிரித்தெடுக்கப்படுவது என்று பொருள்.

D. அத்தகைய ஒரு காயம், அதன் நேரடி விளைவாக உடனடியாகவும், நிரந்தரமாகவும், முற்றிலுமாகவும் மற்றும் முழுமையாகவும் காப்பீடு செய்த நபர் வேலை அல்லது தொழிலில் ஈடுபடுவதை அல்லது எந்தவொரு விவரணைக்குரிய வேலை அல்லது தொழிலில் கவனம் செலுத்த இயலாதவாறு திறனிழப்பை விளைவித்திருக்குமானால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையில் 100% -ற்கு நிகரான மொத்ததொகை காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு வழங்கப்படும்.

E. அத்தகைய ஒரு காயம், விபத்து நிகழ்ந்த பனிரெண்டு காலண்டர் மாதங்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி முழுமையான மற்றும் அல்லது முழுமையற்ற மற்றும் திரும்பப்பெற இயலாதவாறு இழப்பிற்கு ஒரே மற்றும் நேரடி காரணமாக இருக்குமானால் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி உடலிலிருந்து பாகங்கள் பிரிக்கப்படுவதனால் ஏற்படும் உண்மையான இழப்பிற்கு காப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையில் கீழே தரப்பட்டுள்ள சதவிகிதத்தின்படி காப்பீட்டுத் தொகை வழங்கப்படத்தக்கதாகும்.

காப்பீடு செய்யப்பட்ட தொகையில் சதவிகிதம்:

| | | | | |
|---|---|---|---|---|
| i. | கால்விரல்கள் இழப்பு | - | அனைத்து | 20 |
| | கால்பெருவிரல் | - | இரு விரல் எலும்புகள் | 5 |
| | கால்பெருவிரல் | - | ஒரு விரல் எலும்பு | 2 |
| | கால்பெருவிரல் இல்லாமல் இழக்கப்படும் கால்விரல் ஒவ்வொன்றுக்கும் | - | | 1 |
| ii. | செவித்திறனிழப்பு | - | இரு காதுகள் | 75 |
| iii. | செவித்திறனிழப்பு | - | ஒரு காது | 35 |
| iv. | நான்கு விரல்கள் மற்றும் ஒரு கையில் கட்டை விரலிழப்பு | - | | 40 |
| v. | நான்கு விரல்கள் இழப்பு | - | | 35 |
| vi. | கையின் கட்டை விரலிழப்பு | - | இரு கையின் விரல் எலும்புகள் | 25 |
| | | | ஒரு விரல் எலும்பு | 10 |
| vii. | கையின் கட்டை விரலிழப்பு | - | மூன்று விரல் எலும்புகள் (அ) | |
| | | | இரு விரல் எலும்பு (அ) | |
| | | | ஒரு விரல் எலும்பு | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| viii. | நடுவிரல் இழப்பு | - | மூன்று விரல் எலும்புகள் (அ) | |
| | | | இரு விரல் எலும்பு (அ) | |
| | | | ஒரு விரல் எலும்பு | 6 |
| ix. | மோதிர விரலிழப்பு | - | மூன்று விரல் எலும்புகள் (அ) | |
| | | | இரு விரல் எலும்பு (அ) | |
| | | | ஒரு விரல் எலும்பு | 5 |
| x. | சுண்டுவிரலிழப்பு | - | மூன்று விரல் எலும்புகள் (அ) | |
| | | | இரு விரல் எலும்பு (அ) | |
| | | | ஒரு விரல் எலும்பு | 4 |
| xi. | அங்கை முன்னெலும்பு இழப்பு | - | முதல் (அ) இரண்டாவது (கூடுதல்) | |
| | | | மூன்றாவது, நான்காவது (அ) | |
| | | | ஐந்தாவது (கூடுதல்) | 3 |
| xii. | வேறு ஏதாவது நிரந்தர இழப்பு | - | நிறுவனத்தின் பகுதி திறனிழப்பிற்கான குழு மருத்துவரால் மதிப்பீடு செய்யப்பட்டபடி – (%) | |

F) அத்தகைய ஒரு காயம், அதன் நேரடி விளைவாக உடனடியாகவும், நிரந்தரமாகவும், முற்றிலுமாகவும் மற்றும் முழுமையாகவும் காப்பீடு செய்த நபர் வேலை அல்லது தொழிலில் ஈடுபடுவதை அல்லது எந்தவொரு விவரணைக்குரிய வேலை அல்லது தொழிலில் கவனம் செலுத்த இயலாதவாறு திறனிழப்பை விளைவித்திருக்குமானால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையில் ஒரு வாரத்திற்கு ஒரு சதவிகிதம் (1%) என்ற அளவிலான தொகையானது, ஒவ்வொரு வாரமும் அனைத்து பாலிசிகளின் கீழும் வழங்கப்படும். ஆனால், எந்தவொரு நேர்விலும் ஒரு வாரத்திற்கு மொத்தமாக ரூ.3000-க்கும் அதிகமாக இது இருக்காது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணை ஷரத்தின் கீழ், எந்தவொரு காயத்திற்காகவும் திறனிழப்பு தொடங்கிய நாளிலிருந்து கணக்கிடப்பட்டு தரப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகையானது, 100 வாரங்களுக்கு மேல் அதிகமாக வழங்கப்படமாட்டாது மற்றும் எந்தவொரு நேர்விலும் காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும் கூடுதலாக இருக்காது.

பொருந்தக்கூடிய ஆதாயங்களை கணக்கிடும் நோக்கத்திற்காக டேபிள் D மேலே குறிப்பிடப்பட்ட ஆதாயம் (a) –க்கு மட்டும் பொருந்தும்: டேபிள் C மேலே குறிப்பிடப்பட்ட ஆதாயங்கள் (a)-லிருந்து, (e) வரையும் பொருந்தும் மற்றும் டேபிள் A மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதாயம் (a)-லிருந்து, (f) வரை பொருந்தும். இப்பாலிசியின் கீழ் எந்தவொரு கடப்பாடு பொறுப்பிற்காகவும், காப்பீடு செய்யப்பட்ட தொகையுடன் பொருந்துகின்ற ஆதாயங்கள் அட்டவணையில் மிகக்குறிப்பாக விவரணை செய்யப்பட்டபடி கருத்தில் கொள்ளப்படும்.

**சிறப்பு இலவச ஆதாயம்**

இறந்த உடலை எடுத்துச் செல்லுதல், இப்பாலிசியில் வரையறை செய்யப்பட்டபடி விபத்தின் காரணமாக காப்பீடு செய்யப்பட்ட நபர், அவன்/அவளது வீட்டிற்கு வெளியே உயிரிழக்கும் நேர்வில், துணை ஷரத்து (a)-ன் கீழ் வழங்கப்படக்கூடிய தொகையுடன் சேர்த்து கூடுதலாக, காப்பீடு செய்யப்பட்ட நபரின் இறந்த உடலை அவரின் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கான செலவிற்காக காப்பீடு செய்யப்பட்ட தொகையில் 2% மொத்த தொகையாக அல்லது ரூ.2500-ஐ, இவற்றுள் எது குறைவானதோ, அதை காப்பீட்டு நிறுவனம் வழங்கும்.

**விலக்குகள்**

இப்பாலிசியின் கீழ், எல்லா நேரங்களிலும் கீழ்கண்ட விஷயங்களுக்கு அல்லது நேர்வுகளில் காப்பீட்டு நிறுவனம், காப்பீட்டுத்தொகையை வழங்க கடப்பாடு பொறுப்பினைக் கொண்டிருக்காது:

1. திறனிழப்பிற்கான அதே காலஅளவில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணை ஷரத்துகள் ஒன்றுக்கும் மேல் வழங்கப்படும் காப்பீடு.

2. துணை ஷரத்துகள் (a), (b) அல்லது (d) ஆகியவற்றின் ஏதாவது ஒன்றின் கீழ், உரிமக்கோரிக்கை ஏற்கப்பட்டு, அதற்கான இழப்பீட்டுத் தொகை தரப்படவேண்டிய நிலை. மருத்துவச் செலவுகள் விரிவாக்கம் மற்றும் கல்விக்கான நிதியுதவி மற்றும் இறந்த உடலை எடுத்துச் செல்வதற்கான செலவுகள் ஆகியவற்றிற்காக தரப்படும் பணத்தொகைகள் இதன் கீழ் பொருந்தாது.

3. இப்பாலிசியின் கீழ் ஒன்றுக்கும் மேற்பட்ட உரிமக்கோரிக்கை நேர்வில் காப்பீட்டு காலஅளவின்போது, நிறுவனத்தின் அதிகபட்ச கடப்பாடு பொறுப்பானது, இப்பாலிசியின் துணை ஷரத்து (a) – ன் கீழ் வழங்கப்படக்கூடிய தொகையை விட அதிகமாக இருப்பது. மருத்துவச் செலவுகள் விரிவாக்கம் மற்றும் கல்விக்கான நிதியுதவி மற்றும் இறந்த உடலை எடுத்துச் செல்வதற்கான செலவுகள் ஆகியவற்றிற்காக தரப்படும் பணத்தொகைகள் இதன் கீழ் பொருந்தாது.

4. வழங்கப்படுகின்ற மொத்த தொகை கணக்கிடப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலொழிய வாராந்திர இழப்பீட்டுத் தொகை வழங்கல்.

5. கீழ்வரும் காரணங்களுக்காக காப்பீட்டுதாரரின் உயிரிழப்பு, காயம் அல்லது ஊனத்திற்காக இழப்பீட்டுத்தொகை வழங்கல்: a) வேண்டுமென்றே ஏற்படுத்திய சுயகாயம், தற்கொலை அல்லது தற்கொலைக்கு முயற்சித்தல், (b) போதை ஏற்படுத்தும் மது அல்லது போதைப்பொருளின் தாக்கத்தின் கீழ், (c) உலகில் எந்த இடத்திலும் உரிய உரிமம் உள்ள ஸ்டேன்டர்டு வகை வகை விமானத்தில் பயணியாக அல்லாமல் (பயண கட்டணம் செலுத்தியோ அல்லது செலுத்தாமலோ) பலூன் அல்லது விமானத்தில் பயணிக்கும்போது அல்லது விண்வெளிப் பயணம் அல்லது பலூனில் பறக்கும்போது அல்லது அதிலிருந்து ஏறும்போது அல்லது இறங்கும்போது. (d) பால்வினை நோய்கள், எய்ட்ஸ் அல்லது பித்துநிலை ஆகியவற்றால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுகின்ற (e) குற்ற நோக்கத்தோடு காப்பீடு செய்த நபர் சட்டத்தை மீறும்போது ஏற்படுகின்ற அல்லது அதனால் விளைகின்ற

   ஸ்டேன்டர்டு வகை விமானம் என்பதற்கு, ஒரு விமானம் தனியாருக்குச் சொந்தமானதாகவோ அல்லது வாடகை ஒப்பந்தத்தின் கீழ் இயக்கப்படுவதாகவோ அல்லது வழக்கமான விமான நிறுவனத்தால் இயக்கப்படுவதோ அல்லது அந்த விமானம் ஒரு இன்ஜின் அல்லது பல இன்ஜின்களைக் கொண்டிருக்கிறதோ என எதுவாக இருப்பினும் உரிய அதிகார அமைப்பினால் பயணிகளை (வாடகைக்கு அல்லது எதுவாக இருப்பினும்) ஏற்றிச்செல்ல முறையான உரிமம் பெற்றுள்ள எந்தவொரு விமானம் என்றே பொருள்படும்.

6. (போர், படையெடுப்பு, வெளிநாட்டு பகைவரின் நடவடிக்கை, சண்டைகள் (போர் அறிவிப்பு செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும்) உள்நாட்டுப்போர், கிளர்ச்சி, புரட்சி, கலகம்,

இராணுவக்கிளர்ச்சி அல்லது அதிகாரபறிப்பு, அனைத்து மன்னர்கள், இளவரசர்கள் அல்லது எந்தவொரு நாடு, நிலை அல்லது தரம் எதுவாயினும் அதன் மக்களின் சிறைபிடிப்பு, கைப்பற்றல், கைது, கட்டுப்பாடுகள் அல்லது காவலில் வைப்பு ஆகியவற்றினால் அல்லது ஆகியவற்றிலிருந்து அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவற்றுடன் தொடர்புடைய அல்லது தடம் அறியக்கூடிய காரணங்களினால், காப்பீடு செய்த நபருக்கு ஏற்படுகின்ற மரணம், காயம் அல்லது திறனிழப்பிற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை

7. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கதிர்வீச்சு அல்லது ஆதாரம் எதுவாக இருப்பினும் (a) அதிலிருந்து கதிர்வீச்சு செயல்பாட்டினால் மாசுபடல் அல்லது அணு பொருட்களிலிருந்து அல்லது பொருட்களினால் விளைகின்ற அல்லது ஏற்படுகின்ற அல்லது உருவாகின்ற உயிரிழப்பு அல்லது உடல் ரீதியான காயத்தின் போது காப்பீடு செய்த நபருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை. அணு ஆதார எரிபொருளின் எரிதல் என்பது, அணுப்பிளப்பிற்கான எந்தவொரு சுய நிலைப்பு செய்முறையையும் உள்ளடக்கும். (b) அணு ஆயுதப் பொருட்களிலிருந்து உருவாகின்ற அல்லது அவற்றால் பங்களிப்பு செய்யப்படுகின்ற அல்லது அவற்றால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைகின்ற உயிரிழப்பு அல்லது காயம் அல்லது இழப்பு.

இப்பாலிசியின் கீழ் எந்தவொரு கடப்பாடும் நிறுவனத்திற்கு உருவாவதற்கு முன்பு காப்பீடு செய்யப்பட்ட நபர், செய்யவேண்டிய அல்லது செய்யக்கூடாத எந்தவொரு விஷயமாக இருப்பினும் அதுகுறித்து இப்பாலிசியின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை (இதனுடன் உள்ள அனைத்து நிபந்தனைகளும் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களும் இப்பாலிசியின் ஒரு அங்கமாகவே கருதப்பட வேண்டும்). முறையாக பின்பற்ற வேண்டும் மற்றும் பூர்த்தி செய்யவேண்டும்.

8. **கருவுற்ற நிலை – விலக்கல் ஷரத்து:** கருவுற்ற நிலையின் காரணமாக அல்லது அதன் தொடர்ச்சியான விளைவின் காரணமாக அல்லது குழந்தைப் பிறப்பினால் அல்லது அதன் பங்களிப்பினால் அல்லது குழந்தைப் பிறப்பின் சிரமமான அல்லது நீடித்த காலஅளவால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் உயிரிழப்பு அல்லது திறனிழப்பு இப்பாலிசியின் கீழ் காப்பீட்டு வரையறைக்குள் வராது.

**கூட்டுப்பயனுடைய போனஸ்**

இப்பாலிசியின் ஷரத்துகள் (a), (b), (c) மற்றும் (d) –ன் கீழ் வழங்கப்படவுள்ள (விபத்தினால் விளைந்த காயங்களினால் ஏற்படுகின்ற உயிரிழப்பு, உடல் உறுப்புகள் அல்லது பார்வையிழப்பு மற்றும் நிரந்தர, மொத்த திறனிழப்பு) இழப்பீட்டுத் தொகையோடு, பாலிசி அமலிலுள்ள காலத்தில் ஒரு விபத்து நிகழ்வதற்கு முன்பாக, அந்த விபத்திற்காக வழங்கப்படவுள்ள காப்பீட்டுத் தொகை மீது, நிறைவடைந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் காப்பீட்டுத் தொகையில 5% அதிகரிக்கப்பட்டு வழங்கப்படும். ஆனால், அத்தகைய அதிகரிப்பானது இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையில் 50% -ற கும் அதிகமாக இருக்கக்கூடாது. இந்த கூட்டுப்பயனுடைய போனஸ் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படும் பாலிசியின் காப்பீட்டுத் தொகைக்கு மட்டும் பொருந்தும்.

இந்த ஷரத்தானது, எந்த விதத்திலும் காப்பீட்டின் வருடாந்திர குணநலனையோ அல்லது இதன் பிறகு தரப்பட்டுள்ள பாலிசியை ரத்து செய்வதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கு மறுப்பதற்கோ நிறுவனம் கொண்டிருக்கும் உரிமையையோ மாற்றாது. காலாவதியான பிறகு 30 நாட்களுக்குள் பாலிசியானது புதுப்பிக்கப்படுமானால், ஈட்டப்பட்ட கூட்டுப்பயனுடைய போனஸ் தொகை இழக்கப்பட மாட்டாது.

## பிரிவு IX – உண்மை நிலைக்கான உத்தரவாதம்

காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தில், காப்பீடு செய்யப்பட்ட நபரால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள ஊதியம் வாங்குகின்ற எந்தவொரு நபராலும் செய்யப்படுகின்ற நேர்மையற்ற அல்லது மோசடி செயலினால் நேரடியாக பணம் சார்ந்த இழப்பு காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு ஏற்படுமானால், அவருக்கு அத்தகைய இழப்பிற்காக காப்பீட்டு நிறுவனமானது ஈட்டுறுதியை, கீழ்கண்டவைகளுக்கு உட்பட்டு வழங்கும்.

a) இந்த இழப்பானது, பணியில் அமர்த்தப்பட்டுள்ள நபரின் இடைவெளியற்ற தொடர்ச்சியான பணியின்போது, அவரது பணிநிலை மற்றும் கடமைகள் தொடர்பாக ஏற்பட்டிருக்க வேண்டும் மற்றும் இப்பாலிசி அமலிலிருப்பது, இல்லாமல் போகின்ற காலத்திற்கு பிறகு 6 மாதங்களுக்குள்ளாக இந்த இழப்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விரண்டு நிகழ்வுகளில் எது முதலில் நிகழ்கிறதோ, அதுவே பொருந்தும் மற்றும்

b) காப்பீட்டிற்கான எந்தவொரு காலஅளவிலும் பணியிலமர்த்தப்பட்டுள்ள ஒருநபர் அல்லது அனைத்து நபர்களினாலும் ஏற்பட்ட மொத்த இழப்புகளுக்காக நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பானது, இந்த அட்டவணையில் எதிரே குறிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத்தொகைக்கு மிகாமல் உட்பட்டதாகவே அமையும்.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. இழப்பு அல்லது சேதம் நேர்கின்ற போது காப்பீடு செய்யப்பட்ட நபர் உடனடியாக காவல்துறைக்கு புகார் அளிக்க வேண்டும் மற்றும் தவறு செய்த நபர்களை கண்டுபிடித்து தண்டிப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் இழக்கப்பட்ட சொத்தினை மீட்க முயற்சிக்க வேண்டும் மற்றும் எந்த இழப்பீடு ஏற்பட்டது என்று கூறப்படுகிறதோ அது எந்த காரணங்களுக்கு எதிராக காப்பீடு செய்யப்பட்டதோ அவற்றுள் ஒன்றிலிருந்தே உண்மையில் உருவானது என்பதனை திருப்திகரமாக நிறுவனத்திற்கு நிருபணம் செய்ய வேண்டும்.

2. பணியாளர்களில் எவர் ஒருவரின் தவறான செயல்கள் தொடர்பாக ஒன்றுக்கும் மேற்பட்ட உரிமக் கோரிக்கைக்கு இழப்பீடு வழங்குமாறு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட மாட்டாது மற்றும் அட்டவணையில் அத்தகைய பணியாளருக்காக குறிப்பிடப்பட்டுள்ள இடர் தொடங்கும் நாளிலிருந்து செய்யப்படுகின்ற செயல்கள் மற்றும் தவறுகளுக்கு மட்டுமே இழப்பீட்டிற்கான உரிமக்கோரிக்கை பொருந்தும். அத்தகைய பணியாளர்கள் மீது காப்பீடு செய்யப்பட்ட நபரால் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அத்தகைய பணியாளரால் செய்த அல்லது செய்யத் தவறிய செயல்களுக்கு நிறுவனம் ஈட்டுறுதி பொறுப்பை ஒருபோதும் கொண்டிருக்காது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இதன்கீழ் வழங்கப்படக்கூடிய அனைத்து இழப்பீட்டுத் தொகைகளும், நிறுவனத்தின் அலுவலகத்திலேயே வழங்கப்படும். இப்பாலிசியின் கீழ் வழங்கப்படும் எந்தத் தொகைக்கும் வட்டி தரப்படமாட்டாது மற்றும் இழப்பீடு வழங்கப்படக்கூடிய காலத்திற்குப் பிறகு ஓராண்டுக்குள் இத்தொகையை கேட்டுப்பெற்றாலொழிய அத்தகைய தொகையை வழங்குகின்ற நிறுவனத்தின் பொறுப்பு முடிந்துவிடும்.

3. நிறுவனத்திற்கு தேவைப்படுமானால், தேவைப்படும்போது அதன் செலவின்பேரில், ஒரு பணியாளர் செய்த செயலுக்காக் இப்பாலிசியின் கீழ், உரிமக்கோரிக்கை எழுமானால், அவரது செயலுக்காக, அப்பணியாளர் மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை வாங்கித் தருகின்ற விஷயத்தில், காப்பீடு செய்யப்பட்ட நபர் உதவி செய்வதோடு, அனைத்து தகவல்களையும் நிறுவனத்திற்கு வழங்கவேண்டும் மற்றும் இந்த உரிமக்கோரிக்கை தொடர்பாக நிறுவனம் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை அப்பணியாளரிடமிருந்து அல்லது அவரது சொத்திலிருந்து காப்பீட்டு நிறுவனம் திரும்பப் பெறுவதற்கு, காப்பீடு செய்யப்பட்ட நபர் உதவவேண்டும்.

4. உரிமக்கோரிக்கை எழுகின்ற நேர்வில், அப்பணியாளர் அத்தவறான செயல்களை செய்யாதிருந்தால், காப்பீடு செய்யப்பட்ட நபரால் அப்பணியாளருக்கு தரப்படக்கூடிய சம்பளம் அல்லது கமிஷனுக்கு நிகரானத் தொகையானது அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரால்

அப்பணியாளருக்கு தரப்படக்கூடிய வேறு எந்த பணமும் இப்பாலிசியின் கீழ் வழங்கப்படக்கூடிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் மற்றும் அத்தகைய பணியாளருக்குச் சொந்தமான பணம், சொத்துகள், காப்பீடு செய்யப்பட்ட நபரின் கைக்கு வரும் நேர்வில் அதன் அனைத்து அல்லது உரிமக்கோரிக்கைத் தொடர்பாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதற்கு முன்பாக, காப்பீடு செய்யப்பட்ட நபரால் அப்பணியாளருக்குத் தரப்படவேண்டிய தொகை எதுவும் மற்றும் அத்தகைய பணியாளரின் தவறான செயல் கண்டறியப்பட்ட பிறகு, அத்தகைய பணியாளருக்காக காப்பீடு செய்யப்பட்ட நபரிடம் வந்து சேரக்கூடிய பணம் அல்லது பிற சொத்துக்கள் எதுவும் வழங்கப்படக்கூடிய காப்பீட்டுத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

## பிரிவு X – பொது கடப்பாடு உறுதி

காப்பீடு செய்யப்பட்ட நபர், கீழ்கண்ட நேர்வுகளில் பணம் செலுத்த வேண்டிய சட்டப்பூர்வ கடப்பாடு எழும்போது (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு தொகைக்கு உட்பட்டு), காப்பீட்டு நிறுவனம், காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு அதற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்கும்.

a) காப்பீடு செய்யப்பட்ட நபரின் வர்த்தகம் / தொழில் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற எந்த செயலின்போது காப்பீடு செய்யப்பட்ட நபரின் அல்லது அவரது குடும்பத்தின் ஒரு உறுப்பினரால் அல்லது அவரோடு நிரந்தரமாக வீட்டில் தங்கியுள்ள நபர்களால் தவறாகவோ அல்லது கவனக்குறைவாக, காப்பீடு செய்யப்பட்ட நபரின் கீழ் பணியாற்றுகின்ற நபர் அல்லாத வேறு எந்த நபருக்கு விபத்தின் காரணமாக எதிர்பாராமல் ஏற்படும் உயிரிழப்பு அல்லது உடல் ரீதியான காயத்திற்காக, நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ ஒப்புதலோடு காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு ஏற்பட்ட இழப்பீடு மற்றும் வழக்குத் தொடர்பான செலவுகளுக்கு நிறுவனம் இழப்பீட்டை வழங்கும். ஆனால், இவ்வாறு வழங்கப்படும் தொகையானது, இழப்பீடு மற்றும் வழக்குத் தொடர்பான ஆகிய இரண்டிற்கும் சேர்த்து, எந்தவொரு காப்பீட்டு காலஅளவின்போது, எந்தவொரு நிகழ்விற்கு மற்றும் அனைத்து விபத்துகளுக்கும் சேர்த்து அதிகப்பட்ச தொகையான ரூ.50,000/-ற்கு உட்பட்டே வழங்கப்படும்.

b) காப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கு உயிரிழப்பு விபத்துகள் சட்டம் 1855, தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் 1923 அல்லது அதன் மீது செய்யப்பட்ட சட்டத் திருத்தங்கள் அல்லது பணியின்போது அல்லது அதன்மூலம் அத்தகைய தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற உயிரிழப்பு அல்லது உடல் ரீதியான காயம் தொடர்பான பொதுச் சட்டத்தின்கீழ், காப்பீடு செய்யப்பட்ட நபர், அப்பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய இழப்பீட்டுத் தொகை.

### சிறப்பு விலக்குகள்

கீழ்வரும் நேர்வுகளில் அல்லது விஷயங்களுக்கு இழப்பீட்டை வழங்க நிறுவனம் கடப்பாடு பொறுப்பினைக் கொண்டிருக்காது.

i. காப்பீடு செய்யப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்கள், கூட்டாளிகள், இயக்குனர்கள், நிர்வாகப் பணியாளர்கள், ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் ஆகியோரில் எவருக்காவது ஏற்பட்ட உயிரிழப்பு அல்லது உடல்ரீதியான காயம் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரின் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள், கூட்டாளிகள், இயக்குனர்கள், நிர்வாகப் பணியாளர்கள், ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் ஆகியோருக்குச் சொந்தமான அல்லது அவர்களின் கட்டுப்பாட்டின் கீழிருந்த சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீடு.

ii. ஒரு ஒப்பந்தத்தின் காரணமாக காப்பீடு செய்யப்பட்ட நபரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடு (அத்தகையதொரு ஒப்பந்தம் இல்லாதபோதிலும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு சேர்ந்திருக்கக்கூடிய ஒரு கடப்பாடாக இருந்தாலொழிய)

iii. காப்பீடு செய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான அல்லது அவர் கைவசம் உள்ள அல்லது அவரது பாதுகாப்பின் கீழ் உள்ள அல்லது அவரது சார்பாக, இருக்கின்ற விலங்குகள், வாகனங்கள், விமானங்கள், கப்பல்கள் அல்லது படகுகள் அல்லது வேறு எந்தவகை வாகனங்களினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்த விபத்து

## பிரிவு XI – லாபமிழப்பு

இப்பாலிசியின் பிரிவு 1 (கட்டிடம் / அதன் உள்ளடங்கியப் பொருட்கள் / பணம் மற்றும் விலையுயர்ந்தவை தவிர்த்து) – ன் கீழ், காப்பீட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள ஆபத்து செயல்பாட்டின் நேரடி விளைவாக காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு அவரது வர்த்தக / தொழிலில் ஏற்பட்ட இடையூறினால் எழுகின்ற இழப்பீடுகளுக்கு இக்குறிப்பாணை காப்பீடு பாதுகாப்பை வழங்குகிறது. பிரிவு I – ன் கீழ், உரிமக்கோரிக்கை அனுமதிக்கப்படும் தகுநிலைக்கு உட்பட்டதாக இது இருக்கும்.

பிரிவு I, B-ன் கீழ், காப்பீடு செய்யப்பட்ட தொகையைப் பயன்படுத்தி, உருவாக்கப்படுகின்ற ஒரு தொகையாக அல்லது இழப்பு ஏற்பட்ட நேரத்தின்போது இருந்த இயக்க சாதனங்கள், சரக்கிருப்புகள் மற்றும் பிறபொருட்களின் உண்மையான மதிப்பு ஆகிய இவை இரண்டில் எது குறைவானதோ அது.

பணி இடையூறு நாளில் தொடங்கி (ஆபத்து நிகழ்ந்த தேதி) அடுத்த 12 மாத காலஅளவின்போது, மொத்த வேளை நாட்களின் எண்ணிக்கையை காப்பீடு செய்யப்பட்ட ஆபத்து செயல்பாட்டின் விளைவாக இழக்கப்பட்ட முழு வேலை நாட்களின் விகிதம்.

இப்பாலிசியில் இதற்கு மாறாக ஏதாவது குறிப்பிடப்பட்டு இருந்தபோதிலும், உரிமக்கோரிக்கை அனுமதிக்கப்படும் தகுநிலைக்கு உட்பட்டும் மற்றும் கீழே தரப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் பிரிவு 1-ன் கீழ், காப்பீட்டு பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள ஆபத்து செயல்பாடுகளின் நேரடி விளைவாக காப்பீடு செய்யப்பட்ட நபரின் வர்த்தகம் / தொழிலுக்கு ஏற்பட்ட இடையூறினால் உருவாகின்ற இழப்புகளையும் இப்பாலிசியின் கீழ் வழங்கப்பட்டுள்ள காப்பீட்டின் கீழ் இடம்பெறுமாறு விரிவாக்கப்படுகிறது என்று இதன் மூலம் ஒப்புக்கொள்ளப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

1. a) "வர்த்தக / தொழில் இடையூறு" என்ற சொற்றொடர், இப்பாலிசியின் பிரிவு 1-ன் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆபத்துகள் செயல்பாட்டின் காரணமாக, காப்பீடு செய்யப்பட்ட நபர் வழக்கமாக ஈடுபட்டுள்ள இயல்பான வர்த்தக செயல்பாடானது, நிறுத்தப்படுவது என்று பொருள்படும்.

   b) "ஈட்டுறுதிக்காலம்" என்ற சொற்றொடர், பிரிவு எண் 1-ன் கீழ், காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆபத்து செயல்பாடுளின் காரணமாக, காப்பீடு செய்யப்பட்ட நபர் அவரது வழக்கமான வர்த்தக / தொழில் நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த இயலாத காலஅளவைக் குறிக்கும். ஆனால், இழப்பீடு நிகழ்ந்த நாளின் நடுஇரவிலிருந்து கணக்கிடப்பட்டு, 365 நாட்களுக்கு மேல் இது ஒருபோதும் எந்த நேர்விலும் மிகாமல் இருக்கவேண்டும்.

2. ஈட்டுறுதி காலஅளவின்போது ஏதாவது பொருட்கள் காப்பீடு செய்யப்பட்ட நபரால் அல்லது அவரது சார்பாக பிறரால் வேறு எங்காவது விற்கப்படுமால், அத்தகைய விற்பனையில் 35% - க்கு நிகரான தொகையானது இக்காப்பீடு விரிவாக்கத்தின் கீழ், நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பைக் கணக்கிடும்போது கொண்டு வரப்படும் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

3. காப்பீடு செய்யப்பட்ட நபர் அவரது வர்த்தக / தொழில் செயல்பாட்டை மேற்கொண்டுள்ள கட்டிடம் தொடர்பாக, ஆனால் அக்கட்டிடத்தின் மீது காப்பீட்டு ஆதாயத்தை காப்பீடு செய்த நபர் கொண்டிராமல்

இருந்தபோதிலும், இப்பாலிசியின் பிரிவு 1-ன் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆபத்துகளின் நேரடி செயல்பாட்டின் காரணமாக, அத்தகைய இடையூறு ஏற்படுகின்ற நேர்வின்போது தொழில் இடையூறு இழப்பிற்காகவும் இழப்பீட்டுத்தொகை வழங்கப்படக்கூடியதாகும் என்று கூடுதலாக ஒப்புக்கொள்ளப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் பின்விளைவாக ஏற்படும் இடையூறு இழப்பீடுகளுக்கு காப்பீட்டு நிறுவனம் கடப்பாடு பொறுப்பைக் கொண்டிருக்காது:

(a) கடன்பத்திரங்கள், எந்தவொரு வகையிலான ஆவணங்கள் அல்லது பொறுப்புறுதி பத்திரங்கள், ஸ டாம்புகள், நாணயங்கள் அல்லது பணத்தாள்கள், காசோலைகள், கணக்குப் புத்தகங்கள் அல்லது பிற வர்த்தகம் தொடர்புடைய புத்தகங்கள், கணினி சாதன ஆவணங்கள்.

(b) கையெழுத்துப் பிரதிகள், கட்டமைப்பு படங்கள், வரைபடங்கள் அல்லது வடிவமைப்புகள், பேட்டர்ன்கள், மாதிரிகள், அச்சு வார்ப்புகள்

5. கீழ்வரும் காரணங்களினால் இடையூறு இழப்பானது, அதிகரிக்கப்படும்போது அவைகளுக்கு காப்பீட்டு நிறுவனம் கடப்பாடு பொறுப்பினைக் கொண்டிருக்காது.

(a) மறுகட்டுமானப் பணியின்மீது அல்லது வர்த்தக செயல்பாட்டின் மீது அரசு / பொது அதிகாரிகள் விதித்த கட்டுப்பாடுகளினால்

(b) நாசமான, சேதமடைந்த அல்லது இழக்கப்பட்ட சொத்தை / கட்டிடத்தை குறித்த நேரத்தில் மாற்றியமைக்க அல்லது மறுகட்டுமானம் செய்ய போதுமான முதலீட்டுப் பணம் காப்பீடு செய்யப்பட்ட நபரிடம் இல்லாத காரணத்தினால்.

6. கீழ்வரும் நேர்வுகளில் இப்பாலிசியின் மீதான காப்பீட்டுச் செயல்பாடு நின்றுவிடும் அல்லது நிறுத்தப்பட்டு விடும்:

(a) தொழில் \ வர்த்தகமானது, மூடப்படுமானால் அல்லது நிரந்தரமாக நிறுத்தப்படுமானால் அல்லது லக்யூடேட்டர் அல்லது ரீசிவரால் எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால்.

(b) காப்பீடு செய்யப்பட்ட நபரின் காப்பீட்டு ஆதாரப்பொறுப்பு, அவரது இறப்பின் காரணமாக இல்லாமல் போகுமானால் அல்லது

(c) நிறுவனத்தால் அல்லது நிறுவனத்தின் சார்பாக இக்காப்பீடு தொடரப்படுவதை ஒப்புக்கொண்டு, கையெழுத்திடப்பட்டிருந்தாலொழிய, இக்காப்பீடு தொடங்கிய நாளிற்குப் பிறகு எந்தவொரு வேளையிலும் வர்த்தகம் / தொழில் அல்லது கட்டிடங்கள் அல்லது சொத்தில் எந்தவொரு மாற்றம் செய்யப்பட்டு அதன் காரணமாக, காப்பீட்டு நிறுவனத்தின் இடரானது அதிகரித்திருக்குமானால்.

7. எந்தவொரு நிகழ்வு நிகழ்ந்ததன் பேரில் அதன் பின்விளைவாக ஒரு உரிமக்கோரிக்கை இப்பாலிசியின் கீழ் செய்யப்படுமானால், அல்லது செய்யப்படக்கூடுமானால், காப்பீடு செய்யப்பட்ட நபர் கீழ்வரும் செயல்களை மேற்கொள்ளவேண்டும்:

(a) காப்பீட்டு நிறுவனத்திற்கு இந்நிகழ்வு மற்றும் உரிமக்கோரிக்கை குறித்து நோட்டிஸ் வழங்கவேண்டும்.

(b) இழப்பினைத் தவிர்க்க அல்லது குறைக்க தொழில் மீதான தலையீடு அல்லது இடையூறைத் தடைசெய்ய அல்லது குறைக்க நியாயமாக மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் செய்வதற்கு மற்றும் செய்ய அனுமதிப்பதற்கு முறையான விடாமுயற்சியினை மேற்கொள்ள ஒப்புக்கொண்டு செயல்படவேண்டும்.

(c) ஈட்டுறுதிக்காலம் முடிவடைந்த பிறகு 30 நாட்களுக்கு மிகைப்படாமல் அல்லது எழுத்துப்பூர்வமாக நிறுவனம் கூடுதல் காலஅளவை அனுமதிக்குமானால், அதற்குள் அவரது சொந்த செலவில் / முயற்சியில் அவரது உரிமக்கோரிக்கையோடு இந்நிகழ்வின் காரணமாக ஏற்பட்ட எந்த வகையான இழப்பு மற்றும் அது குறித்த அனைத்து விவரக்குறிப்புகளுடன் எழுத்துப்பூர்வமாக காப்பீட்டு நிறுவனத்திற்கு ஒரு அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

(d) நிறுவனத்தால் அல்லது நிறுவனம் சார்பாக இந்த உரிமக்கோரிக்கையை உறுதிப்படுத்த அல்லது நுண்ணாய்வு செய்யும் நோக்கத்திற்காக நியாயமாக தேவைப்படக்கூடிய சாட்சியங்கள், தகவல்கள், விளக்கங்கள் மற்றும் பிற சான்றுகளை அவரது சொந்த செலவில் / முயற்சியின்பேரில், காப்பீடு செய்யப்பட்ட நபர் தயாரித்து / சேகரித்து நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், உரிமக்கோரிக்கையின் உண்மைநிலை குறித்து மற்றும் அது தொடர்புடைய எந்தவொரு விஷயங்கள் குறித்தும் உண்மை தகவல் அளிப்பிற்கான அறிவிக்கையை அல்லது வேறு எந்த சட்டப்பூர்வ படிவத்தில் காப்பீடு செய்யப்பட்ட நபர் வழங்கவேண்டும்.

இப்பாலிசியின் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை முறையாக பின்பற்றி நடந்திருந்தாலொழிய இப்பாலிசியின் கீழ் எந்த ஒரு உரிமக்கோரிக்கைக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படமாட்டாது. எந்த வகையிலாவது இவைகள் பின்பற்றப்படாமல் இருக்குமானால், இவ்வுரிமக்கோரிக்கைக்காக ஏதாவது இழப்பீட்டுத்தொகை ஏற்கனவே வழங்கப்பட்டிருக்குமானால், அத்தொகை காப்பீட்டு நிறுவனத்திற்கு உடனடியாக திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

**பின்குறிப்பு:** பிரிமியத் தொகைக்கான காசோலை, பணமின்றி திரும்ப வந்திருக்கும் நேர்வில், பாலிசியானது தொடக்கத்திலிருந்தே ரத்து செய்யப்பட்டதாகிவிடும்.